மட்/ககு/பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) – 2020

அத்தியாயம் ஐந்து (வெளிப்பேறு அனுமானம்)

பகுதி - 01

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

01. வெளிப்பேறு அனுமானம் தொடர்பான சரியான கூற்று

1. அளவால், பண்பால் அல்லது இரண்டினாலும் வேறுபடும் அனுமானம்
2. எழுவாயால் அல்லது பயனிலையால் வேறுபடும் அனுமானம்
3. இருகூற்று அனுமானம்
4. எழுவாயால் மட்டும் வேறுபடும் அனுமானம்
5. எழுவாயால் அல்லது பயனிலையால் அல்லது இரண்டினாலும் வேறுபடும் அனுமானம்

02. பின்வருவனவற்றுள் எதிர்மாற்றத்தின் விதியாக அமைவது

1. அளவை மாற்ற வேண்டும்
2. எழுவாயின் எதிர்மறைப்பதம் அமைதல் வேண்டும்
3. பயனிலையின் எதிர்மறைப்பதம் அமைதல் வேண்டும்
4. மூலஎடுப்பில் வியாப்தியடையாத பதம் எதிர்மாற்றத்தின் போது வியாப்தியடைதல் கூடாது
5. எழுவாய் பயனிலை இடம்மாற்றம் பெறக்கூடாது

03. நிறைவிதி எடுப்பின் எதிர்மாற்றம் நிறைவிதி எடுப்பாக இல்லாமல் இருப்பதற்கான காரணம்

1. மூலஎடுப்பின் அளவினை மாற்ற வேண்டும் என்ற விதிக்கமைவாக
2. மூல எடுப்பின் பண்பினை மாற்ற வேண்டும் என்ற விதிக்கமைவாக
3. மூலஎடுப்பின் எழுவாய், பயனிலையை இடமாற்ற வேண்டும் என்ற விதிக்கமைய
4. மூலஎடுப்பின் வியாப்தியடையாத பதம் புதிய எடுப்பில் வியாப்தியடைய கூடாது என்ற விதிக்கமைய
5. பாரம்பரிய அளவையியலின் விருப்பிற்கமைய

04. ‘‘சில மாணவர்கள் அறிவற்றவர்களாயின் அறிவற்ற சில மாணவர்கள்’’ என்பது

1. முறையான எதிர்மாற்றம்
2. வாய்ப்பற்ற எதிர்வைக்கை
3. வாய்ப்பான எதிர்வைக்கை
4. வாய்ப்பான மறுமாற்றம்
5. வாய்ப்பற்ற மறுமாற்றம்

05. எந்த காகமும் கறுப்பல்ல எனின் எல்லாக் காகங்களும் கறுப்பல்லாதவை என்பது

1. முறையற்ற எதிர்வைக்கை
2. வலிதான எதிர்மாற்றம்
3. முறையற்ற நேர்மாற்றம்
4. முறையான மறுமாற்றம்
5. முறையற்ற மறுமாற்றம்

06. ‘‘சில மாணவர்கள் புத்திசாலிகள் அல்ல’’ என்பதன் எதிர்வைக்கை

1. சில மாணவர்கள் புத்திசாலிகள் அல்ல
2. சில புத்திசாலியல்லாதவர்கள் மாணவர்கள் அல்லர்
3. புத்திசாலி அல்லாத சிலர் மாணவர்கள்
4. சில புத்திசாலிகள் மாணவர்கள் அல்லர்
5. சில புத்திசாலியல்லாதவர் மாணவரல்லாதவர் அல்லர்

www.ikedu.lk

07. சில குழந்தைகள் நுண்ணறிவாளர்கள் அல்லராயின் நுண்ணறிவில்லாதவர் சிலர் குழந்தைகள் அல்லாதவர் அல்லர் என்பது

1. வாய்ப்பான எதிர்மாற்றம்
2. வாய்ப்பான மறுமாற்ற எதிர்வைக்கை
3. வாய்ப்பற்ற எதிர்மாற்றம்
4. வாய்ப்பான மறுமாற்ற எதிர்மாற்றம்
5. வாய்ப்பான மறுமாற்ற எதிர்மாற்றம்

08. எந்த நாயும் குரைப்பதில்லை எனின் குரைப்பன நாய்கள் அல்ல என்பது

1. வாய்ப்பான நேர்மாற்றம்
2. வாய்ப்பான எதிர்மாற்றம்
3. வாய்ப்பான மறுமாற்றம்
4. வாய்ப்பற்ற எதிர்வைக்கை
5. வாய்ப்பற்ற எதிர்மாற்றம்

09. மூல எடுப்பின் கருத்துமாறாமல் இருக்க எழுவாயின் மறையை பயனிலையாகவும் பயனிலையை எழுவாயாகவும் கொண்டமைந்த அனுமானம் எது

1. மறுமாற்றம்
2. எதிர்மாற்றம்
3. மறுமாற்ற எதிர்வைக்கை
4. மறுமாற்ற நேர்மாற்றம்
5. மறுமாற்ற எதிர்மாற்றம்

10. நேர்மையற்றவர்கள் எவரேனும் பண்பானவர்கள் அல்ல எனும் எடுப்பின் மறுமாற்ற எதிர்மாற்றம்

1. பண்பானவர்கள் எல்லோரும் நேர்மையானவர்கள் ஆகும்
2. பண்பற்றவர்கள் எவரும் நேர்மையானவர்கள் அல்ல.
3. பண்பற்றவர்கள் எவ்லோரும் நேர்மையானவர்கள் ஆகும்.
4. பண்பானவர்கள் எல்லோரும் நேர்மையற்றவர்கள் ஆகும்.
5. பண்பானவர்கள் எல்லோரும் நேர்மையறறவர்கள் அலல.

www.ikeduLK

பகுதி - 02

பின்வரும் வாதங்களின் வாய்ப்பினை வெளிப்பேற்றின் அடிப்படையில் துணிக.

பகுதி - அ

1. எல்லா பூக்களும் மணம்வீசுவன ஆகும் ஆகவே சில பூக்கள்அல்லாதவை மணம் வீசாதன ஆகும்.

2. எந்த மின்விசிறியும் விலையுயர்ந்தது அல்ல ஆகவே எல்லா விலையுயர்ந்ததும் மின்விசிறி ஆகும்.

3. எல்லா தீயவரல்லாதவர்களும் பணக்காரர்அல்லாதவர் ஆவர் ஏனெனில் எல்லா பணக்காரர்களும் தீயவர்கள் ஆவர் என்பதால் ஆகும்.

4. சில கைதிகள் குற்றம்செய்தவர்கள் ஆவர் ஆகவே சில குற்றம்செய்தவர்கள் கைதிகள் அல்லாதவர்கள் அல்ல

5. எந்த மரங்களும் ஆறறிவுடையது அல்ல ஆகவே ஆறறிவல்லாத எதுவும் மரங்கள் அல்லாதவை அல்ல

பகுதி - ஆ

1. குறைமறை எடுப்பிற்கு ஏன் எதிர்மாற்றம் செய்ய முடியாது என்பதை உதாரணத்துடன் விளக்குக.

2. நிறைவிதி எடுப்பின் எதிர்மாற்றமாக ஏன் நிறைவிதி எடுப்பே அமையவில்லை என்பதை உதாரணங்களுடாக விளக்குக.

www.lkedu.lk